**Kantonales Impfzentrum**
**Charlottenfels**

sh.ch

# கோவிட்-19 தடுப்பூசி பற்றிய தகவல்

**அடிப்படை தடுப்பூசி:** நன்கு இணக்கமான மூன்று தடுப்பூசி மருந்துகள் உள்ளன : **ஃபைசர்**, **மாடர்னா** மற்றும் **ஜான்சென்**. **ஃபைசர்** மற்றும் **மாடர்னாவில்** அடிப்படை தடுப்பூசிக்கு நான்கு வார இடைவெளியில் இரண்டு ஊசிகள் தேவைப்படுகின்றன, **ஜான்சனில்** ஒன்று மட்டுமே . பின்னர் பல மாதங்களுக்கு 90% நோய்க்கு எதிராக நல்ல பாதுகாப்பு உள்ளது**.**

**புத்துயிர்ப்பு தடுப்பூசி:** இது அவசியம், ஏனெனில் மேலேயுள்ள தடுப்பூசிகளில் தடுப்பூசி பாதுகாப்பு குறிப்பாக புதிய மாறுபாடுகளுக்கு எதிராக ஒரு சில மாதங்களில் குறைகின்றது. நீங்கள் **ஃபைசர்** மற்றும் **மாடர்னாவுடன்** கடைசியாக தடுப்பூசி போட்டு 4 முதல் 6 மாதங்களுக்கும் மேலாக இருந்தால் இரண்டு தடுப்பூசி மருந்துகளிலும் (16 வயது முதல் ஃபைசர், 18 வயது முதல் மாடர்னா) ஒரு புத்துயிர்ப்பு தடுப்பூசி = பூஸ்டர் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது. இது பொதுவாக முதல் தடுப்பூசிகளின் அதே தடுப்பூசி மருந்து மூலம் நடைபெறுகிறது. நீங்கள் **ஜான்செனை** பெற்றிருந்தால், முதல் தடுப்பூசி போட்ட 2 மாதங்களிற்குப் பிறகு 18 வயதிலிருந்து அதே தடுப்பூசி மருந்துடன் ஒரு புத்துயிர்ப்பு தடுப்பூசியைப் போட பரிந்துரைக்கப்படுகிறது.

இதுவரையான அனுபவங்களின் படி, தடுப்பூசிகள் நன்கு இணக்கமாக உள்ளன. மிகவும் பொதுவான பக்க விளைவுகள் : ஊசி போடும் இடத்தில் லேசான வலி, சோர்வு, தலைவலி - மற்றும் உடல்வலி, ஒருவேளை காய்ச்சல். அரிதாக, இதய தசை அழற்சி,குறிப்பாக 30 வயதிற்குட்பட்ட இளையவர்களில் தீவிரமற்ற போக்குடன் வரலாம். தீவிரமான நீண்ட கால பக்க விளைவுகள் மற்றும் பிந்திய விளைவுகள் இதுவரை ஏற்படவில்லை மற்றும் எதிர்பார்க்கப்படவில்லை . பக்க விளைவுகள்
பொதுவாக லேசானவை மற்றும் குறுகிய காலமே உள்ளன. இந்த பக்கவிளைவுகள் பொதுவாக நீங்கள் கொரோனாவால் நோயுறுவதைக் காட்டிலும் குறைந்தளவே தீவிரமானவை.

நோய்க்கு எதிராக தடுப்பூசி நல்ல பாதுகாப்பை அளித்தாலும், பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரம்- மற்றும் நடத்தை விதிகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பது முக்கியம்.

நாங்கள் இறுதியாக பெருந்தொற்றைக் கடந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப விரும்புகிறோம்.அதற்கு எங்களுக்கு தடுப்பூசி தேவை.

**தடுப்பூசி போடுங்கள்!** Charlottenfels தடுப்பூசி மையத்திற்கு உங்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். தடுப்பூசி போடுவது மிகவும் எளிதானது மற்றும் சிக்கலற்றது. அதற்கு நீங்கள் பதிவு செய்வதே சிறந்த விஷயம்.

அன்பான வாழ்த்துக்களுடன்

கோவிட்-19 தடுப்பூசி குழு

## நான் எவ்வாறு தடுப்பூசி போட முடியும்?

*உங்கள் அடையாள அட்டை, தடுப்பூசி கையேடு (கிடைத்தால்) மற்றும் சுகாதார காப்பீட்டு அட்டை ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள்*

<u>இணையம் வழியாக வழமையான பதிவு: **sh.ch**</u>

<u>அல்லது **052 632 65 57** தொலைபேசி எண் மூலம் சந்திப்பிற்கு பதிவு செய்தல்</u>

<u>பதிவு இல்லாமல் தடுப்பூசி போடுதல்: வாக்-இன் செவ்வாய்க்கிழமை 17 – 20 மணி</u>
இது 1வது மற்றும் 2 வது தடுப்பூசிக்கு மட்டுமே சாத்தியம், புத்துயிர்ப்பு தடுப்பூசிக்கு அல்ல!